# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 20.03.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்றிலிருந்து 120 வருடம் முன்பு இதே மார்ச் மாதம் 23 ஆம் தேதி திருக்குர்ஆனின் மகத்தான ஒரு முன்னறிவிப்பும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அறிவிக்கப்பட்டதுமான ஒரு நற்செய்தி நிறைவேறியதை நீங்கள் அறிவீர்கள்.

முஸ்லிம் சமுதாயத்தின் ஆயிரம் வருட இருள் அகன்று, இஸ்லாம் மார்க்கத்தின் பெரும்பாலான முஸ்லிம்கள் வெறும் பெயரளவில் முஸ்லிமாக இருந்த நிலை மாறி ஒரு நிலவு இஸ்லாத்திற்கு ஒளிதரயிருந்தது. அந்த நிலவு **சிராஜெ முனீர்** - ஒளி வீசும் சூரியன் (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து ஒளிபெற்று வழங்க இருந்தது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப அந்த நிலவு கியாமத் வரை ஒளி வழங்கிக் கொண்டே செல்ல வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர் நிரந்தரமானதாக இருக்க வேண்டியிருந்தது.

தமது எஜமானரும், வழிகாட்டியுமான ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தின் அழகு மற்றும் ஒளியின் மூலமாக, உலகத்தினரின் உள்ளங்களுக்கு நிரந்தரமாக ஒளியூட்டிக் கொண்டிருப்பவர் வரவேண்டியிருந்தது. ஆகவே அந்த நபி (ஸல்) அவர்களின் அம்மகத்தான ஆன்மீகப் புதல்வரின் காலகட்டம் மார்ச் 23, 1889 ஆம் வருடத்திலிருந்து தொடங்கியது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இல்ஹாம் மூலமாக அறிவித்தான்.

**இஸா அஸம்த்த ஃபதவக்கல் அலல்லாஹ். வஸ்னயில் ஃபுல்க பி அயியுனினா. அல்லஸீத யுபாயியூனுக்க இன்னமா யுபாயியூனல்லாஹ். யதுல்லாஹி ஃபவ்க அய்தீஹிம்.**

இஸாலே அவ்ஹாமில் இந்த இல்ஹாமிற்குப் பொருளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

நீ இந்த தொண்டினை செய்வதற்காக முடிவு செய்து விட்டால் இறைவன் மீதே நம்பிக்கை கொள்வீராக. என் கண்களுக்கு முன்பாக எனது வஹியைக் கொண்டு நீ ஒரு கப்பலைக் கட்டுவாயாக. உன்னிடம் பைஅத் செய்பவர்கள் உன்னிடம் அன்று. மாறாக, இறைவனிடம் பைஅத் செய்தவர்களாவர். இறைவனது கை (உம்மிடம் பைஅத் செய்கின்ற) அவர்களின் கையின் மீது இருக்கும்.

பிறகு இன்னோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த இயக்கத்தை உருவாக்கும் போது அல்லாஹ் என்னிடம் கூறினான். உலகில் வழிகேட்டின் புயல் வீசுகிறது. நீ இந்தப் புயல் வீசும் காலத்தில் ஒரு கப்பலைக் கட்டுவாயாக. எவர் உனது கப்பலில் ஏறுவாரோ அவர் மூழ்கிவிடுவதிலிருந்து பாதுகாப்பாக இருப்பார். எவர் மறுப்பாரோ அவருக்கு முன் மரணமே இருக்கும்.

அன்னார் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப 1889 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் நாளிலிருந்து பைஅத் வாங்கினார்கள். நூற்றுக்கணக்கான நற்பேறு பெற்றவர்கள் அந்தக் கப்பலில் ஏறினார்கள். இந்த எண்ணிக்கை அதிகரித்து அதிகரித்து இலட்சத்தை எட்டியது. அவர்களிடம் பைஅத் செய்தவர்கள் தமது பைஅத்தின் உரிமையை நிலைநாட்டினார்கள். அல்லாஹ் தனது கரத்தை அவர்களின் மீது வைத்தான். அம்மக்களும் தமது ஆன்மீக படித்தரங்களை படிப்படியாக முன்னேற்றிக் கொண்டு சென்றனர். அவர்களின் மீது எதிர்ப்பு என்ற பயங்கர இருள் கடந்து சென்றது. தம்மவர், அன்னியர் என்று இரு தரப்பிலிருந்தும் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருந்தது. எந்த அளவுக்கு எனில் பைஅத் செய்ததற்காக சிலர் ஷஹீதும் ஆக்கப்பட்டனர். இவர்களில் மிகவும் முக்கியமானவர் ஹஸ்ரத் அப்துல் லத்தீஃப் ஷஹீத் என்ற பெருமகன் ஆவார்கள்.

மவ்லவிகளின் ஃபத்வாவினால் அரசரின் கட்டளையால் மிகவும் அநீதியான முறையில் உடல் மண்ணில் உயிரோடு இறக்கப்பட்டு கல்லெறிந்து **ஷஹீதாக்கப்பட்டனர்.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அனைத்தும் அப்போது அன்னாரின் மீது இழைக்கப்பட்டு சஹாபாக்களின் நினைவு புதுப்பிக்கப்பட்டது. ஆனால் இந்த மிரட்டல்கள், கொலைகள் அரசு கெடுபிடிகளுக்கு பிறகும் கூட இந்த இயக்கம் அல்லாஹ்வின் கட்டளையால் வளர்ச்சியையே பெற்றுக் கொண்டு செல்கிறது. இறுதியில் 26 மே 1908 –ல் அன்னார் இறை நியதிக்கு இணங்க தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமைப்படுத்தி தமது எஜமானரின் சந்நிதியில் சென்று சேர்ந்தார்கள். பிறகு அல்லாஹ் அன்னாருக்கு ஆறுதல் கூறியதற்கிணங்க அன்னாரின் இரண்டாவது காலகட்டம் குத்ரத்தே ஸானியா – இரண்டாவது வல்லமையின் காலகட்டம் உருவாகும் என்று இறைவன் அறிவித்ததற்கு இணங்க அக்காலகட்டம் தொடங்கியது.

**இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே இவ்வாறு கூறுகின்றார்கள்:**

சுருக்கமாக அல்லாஹ் இருவகையான வல்லமைகளை வெளிப்படுத்துகிறான். ஒன்று நபிமார்களின் கைகளின் மூலம் தனது வல்லமையின் கரத்தை நீட்டுகிறான். இரண்டாவது நபிமார்களின் மரணத்திற்குப் பிறகு பிரச்சனைகள் வரும் போது எதிரிகளின் கூச்சல் அதிகமாகி இப்போது எல்லா பணிகளும் தடைபட்டுவிட்டது என்று அந்த எதிரிகள் கருதும் போது, இந்த ஜமாஅத் இனி வேரோடு அழிந்து விடும் என்று அவர்கள் உறுதி கொள்ளும்போது – என் ஜமாஅத்தில் உள்ள சிலர் கூட விரக்தியடைந்து அவர்களின் இடுப்புகள் முறிந்து விடும் அந்த நிலையில் பல நற்பேறிழந்தவர்கள் முர்தத் ஆகி விடவும் செய்வர். அப்போது இறைவன் தனது வலுவான வல்லமையை இரண்டாவது முறையாக வெளிப்படுத்துவான். வீழ்ந்து கொண்டிருக்கும் ஜமாஅத்தைப் பிடித்து அரவணைத்துக் கொள்கிறான். எவர் கடைசி வரை பொறுமையாக இருப்பாரோ அவரே இந்த இறைவல்லமை வெளிப்படுவதைக் காண்பார்.

இந்த இரண்டாவது வல்லமை வெளிப்பட்ட போது அன்னார் கூறியது போன்று சில பேரிழந்தவர்கள் ஐயத்திற்குள்ளாயினர். நான் என்ற அகம்பாவத்தின் சூழலில் மாட்டிக் கொண்டனர். அவர்களை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மிகவும் தெளிவான வார்த்தைகளில் புரிய வைத்து சீர்திருத்த முயன்றார்கள். ஆனால் அவர்களின் துர்பாக்கியம் இரண்டாவது கிலாஃபத்தின் தேர்தல் நடந்தபோது அவர்களுள் சிலர் முர்தத் ஆயினர். வீழ்ந்து விட்ட ஜமாஅத்தை அல்லாஹ், **பதுல்லாஹி ஃபவ்க அய்தீஹிம்** – அவர்களின் கைகளின் மேல் அல்லாஹ்வின் கை உள்ளது என்று கூறி காப்பாற்றி விடுகிறான் என்பதை அவர்கள் புரியவில்லை.

இந்தக் கப்பலில் ஏறியவரே – அந்த இரண்டாவது வல்லமையை ஏற்பவரே மூழ்குவதிலிருந்து பாதுகாக்கப்படுவர் என்பதை விளங்கவில்லை. அந்த இரண்டாவது வல்லமை என்பது அஞ்சுமன் அல்ல. மாறாக கிலாஃபத் ஆகும்.

இன்று நாம் நற்பேறு பெற்றவர்கள் கிலாஃபத்துடன் இணைந்திருப்பதன் காரணத்தால் இந்தக் கப்பலில் ஏறியுள்ளோம். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கிய கப்பல் ஆகும். அதில் ஏறி வழிகேட்டிலிருந்து தப்பியுள்ளோம். மேலும் நமக்கு மேல் அல்லாஹ்வின் கரம் உள்ளது. உலகம் இருளின் பக்கம் செல்கிறது. ஆனால் அஹ்மதிகள் மட்டுமே வல்லமையுள்ள இறைவனின் காட்சியைக் காண்கின்றனர். 1908 –லிருந்து இன்று வரை புதிய புதிய எதிரிகள் தோன்றி ஜமாஅத்தை அழிக்க முயன்று வந்துள்ளனர். ஆனால் அல்லாஹ் எப்போதும் பெரும் பெரும் சோதனைகளிலும் எதிரிகளின் செயல்களின் தீய விளைவிலிருந்தும் ஜமாஅத்தைக் காப்பாற்றியே வந்துள்ளான். அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஜமாஅத் எங்கெல்லாம் பரவி வருகிறதோ அங்கெல்லாம் பொறாமையின் நெருப்பும், எதிர்ப்பும் கூட வளரவே செய்கிறது.

பெயர்தாங்கி சுயநலவாதிகளான உலமாக்களின சூழ்ச்சி செல்லுபடியாகும் இடங்களிலெல்லாம் இறைவனின் பெயரால் இதனை செய்வதில் தயங்குவதில்லை. ஆனால் ஒவ்வொரு எதிர்ப்பும், அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானும் வளரவே காரணமாக அமைந்தது. ஏனெனில் அல்லாஹ் முன்னரே கூறினான். இந்த சமுதாயம் ஈமானுக்காக கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் தெளிவாக காணப்படுகிறது. ஈமான் முழுமையடைவதற்கு சோதனை வருவது அவசியமாகும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**அஹஸிபன்னாஸு அ(ன்)ய்யுத்ரகூ அ(ன்)ய்யகூலு ஆமன்னா வஹும் லா யுஃப்தனூன்** – நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவதனால் அவர்கள் விட்டுவிடப்படுவார்கள் என்றும், அவர்கள் சோதனைக்கு ஆளாக்கப்படமாட்டார்கள் என்றும் மக்கள் எண்ணுகின்றனரா? (29:3)

சுருக்கமாக, பரிட்சை (சோதனை) மிக மிகத் தேவையான ஒன்றாகும்.

இந்த இயக்கத்தில் நுழைபவர் சோதனைக்கு உட்படுவதிலிருந்து தப்பிவிட இயலாது. நமது பல நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒருபுறம்; அவர்களது தந்தை மறுபுறம். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதால் தமது பெற்றோரை விட்டுப் பிரிந்துள்ளனர். பிறகு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

எப்போது கடும் சோதனை வந்தாலும் மனிதன் இறைவனுக்காக பொறுமை காட்ட வேண்டும். பிறகு அந்த சோதனைகளே அவர்களை மலக்குகளோடு இணைக்கும். நபி மற்றும் அவர்களது ஜமாஅத்திற்கு சோதனைகள் வருவது அவர்களை இறைவனோடு இணைப்பதற்காகவே வருகிறது. சோதனைகள் இல்லாமல் வெற்றி பெறுவது சாத்தியமில்லை.

இவை ஈமானை உறுதிப்படுத்துவதற்குரிய போதனைகளாகும். அல்லாஹ்வின் அருளால் இந்த போதனைகளையே இன்று அஹ்மதிகள் பற்றிப்பிடித்திருக்கின்றனர்.

ஒவ்வொரு எதிர்ப்பும் நமது ஈமானுக்கு உரம் என்று ஒவ்வொரு அஹ்மதியும் நன்றாக உணர்ந்துள்ளார். சென்ற குத்பாவில் நான் பல்கேரியாவில் புதிதாக பைஅத் செய்தவர்கள் பற்றி குறிப்பிட்டேன். சிலர் புது அஹ்மதிகள். சிலர் சில வருடங்கள் முன்பு அஹ்மதியானவர்கள்.

அங்குள்ள முஸ்லிம் முஃப்திகளின் பேச்சைக் கேட்டு அரசாங்கம் அஹ்மதிகளுக்கு பெரும் தொல்லை கொடுத்து வருகிறது. அஹ்மதிகளை காவல்துறையினர் கைது செய்தனர். காவல் நிலையங்களுக்கு கொண்டு சென்றது. அவர்களுக்கு நான் ஸலாம் சொல்லி அனுப்பினேன். அவர்களின் நிலைமைகளை விசாரித்தேன். அப்போது அங்குள்ள மவ்லவி சாஹிப் கூறினார்கள். கைது செய்யப்பட்ட ஒவ்வொரு அஹ்மதியையும் தனித்தனியாக தொடர்பு கொண்டேன். நாங்கள் அல்லாஹ்வின் அருளால் எங்கள் ஈமானில் உறுதியாக இருக்கிறோம் என்பதே அவர்கள் ஒவ்வொருவரின் பதிலாக இருந்தது. இந்த எதிர்ப்புகள் ஒரு பொருட்டே இல்லை. அவர்கள் என்னவேண்டுமானாலும் செய்யட்டும். நாங்கள் சகித்துக் கொள்வோம். ஜமாஅத்திற்காக பொறுத்துக் கொள்வோம். எங்களுக்காக நீங்கள் துஆ மட்டும் செய்து வாருங்கள் என்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்ன பெரிய புரட்சி செய்து விட்டார்கள்? என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால் இது புரட்சியில்லாமல் வேறு என்ன? திருக்குர்ஆனின் ஒளியை – போதனையை அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நன்றாக புரிந்து கொண்டனர். அவர்களுக்கு அல்லாஹ் மிக நன்றாக புரியும் திறனை வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் நெருக்கம் பெற வேண்டும் எனில் இந்த சோதனையை கடந்து செல்ல வேண்டியுள்ளது. ஐரோப்பியர்கள் இதனை சிந்தித்து கூட பார்த்திருக்க இயலாது. கம்யூனிச சிந்தனையின் கீழ் நீண்ட காலம் வாழ்ந்த மக்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரின் போதனையுடன் ஆழ்ந்த தொடர்பு ஏற்பட்டுள்ளது என்றால் அது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் சிறப்பான அருளினாலேயே ஏற்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்தில் இணைந்ததற்காக அல்லாஹ் அவர்களுக்கு இப்பலனை வழங்கியுள்ளான்.

அதே போன்று இந்தியாவில் இன்றைய நாட்களில் புதிதாக உருவாகியுள்ள ஜமாஅத்துகளில் அதிகமாக அநீதியிழைக்கப்பட்டு வருகிறது. இந்த அநீதியும் வழக்கம் போல் பெயர்தாங்கி உலமாக்கள் தான்

செய்கின்றனர். முல்லாக்கள் பேச்சைக் கேட்டு அங்குள்ள சில முஸ்லிம்கள் சில செயல்களைச் செய்கின்றனர். அரசாங்கம் இவ்விஷயத்தில் தலையிட விரும்பாமல் இருக்கிறது. காரணம் அங்கு (இந்தியாவில்) விரைவில் தேர்தல் வரவிருக்கிறது. முஸ்லிம்களின் ஓட்டு அவர்களுக்கு தேவை! அஹ்மதிகளுக்கு அத்தகைய பெரும்பான்மை இல்லை! ஆனால் இந்த அநீதி இழைப்பவர்களும், அநீதி நடக்கும் போது கண்ணை மூடிக்கொண்டு இருப்பவர்களும் ஒன்றை நினைவில் கொள்ளட்டும்.

உலகியல் சக்திகள் நிச்சயமாக அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் இல்லை. ஆனால் இறைவன் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இருக்கிறான். அவன் நமது எஜமானன். அவன் நமது உதவிக்கு வருகிறான். அவனது நியதி செயல்படத் தொடங்கி விட்டால் எதுவும் அதற்கு முன்னால் நிற்க இயலாது.

எனவே இந்திய அஹ்மதிகள் பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். துஆவில் அதிக ஆர்வம் காட்டுங்கள். உங்கள் ரப்புடன் முன்னரை விட அதிகமாக தொடர்பை உருவாக்குங்கள்.

இவ்வாறு பாகிஸ்தானிலும் அஹ்மதிய்யத்தின் மீதுள்ள எதிர்ப்பு உச்சத்தில் இருக்கிறது. முல்லாக்களின் முயற்சியையும் அரசாங்கம் நடந்து கொள்ளும் முறையையும் பார்க்கும் போது வியப்பு ஏற்படுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுப்பப்பட்ட காலத்திலிருந்து எதிர்ப்புகள் ஆரம்பித்து இன்று வரை தொடர்கிறது. மவ்லவிகள் தம் புறமிருந்து நஷ்டமிழைக்க முயன்று வந்தனர். மற்றவர்களையும் ஜமாஅத்திற்கு எதிராக தூண்டி விட்டனர். எப்படியாவது ஜமாஅத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தி அழித்துவிட வேண்டும் என்று நினைத்தனர். ஆனால், அவர்களின் ஒவ்வொரு முயற்சிக்கு பிறகும் ஜமாஅத் முன்னேற்றத்தின் பக்கமே சென்று கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்தும் இந்த மவ்லவிகளுக்கு உணர்வு ஏற்படவில்லை. இதிலிருந்து இந்த ஜமாஅத்தை ஒரு மனிதர் உருவாக்கியதில்லை என்று நிரூபணமாகியுள்ளது. மாறாக இறைவன் உருவாக்கிய ஜமாஅத் ஆகும். மேலும் இறைவனது அடையாளங்களுள் ஓர் அடையாளம் நான் ஆரம்பத்தில் கூறியிருப்பது போன்று இறைவனது மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறியிருப்பதற்கான தெள்ளத் தெளிவான ஓர் அடையாளமாகும். எனவே, அந்த எதிரிகளிடம் கூறிக் கொள்கிறேன். அறிவைப் பயன்படுத்துங்கள். அல்லாஹ்வை எதிர்த்து நிற்பதிலிருந்து விலகுங்கள். இறைவனுக்கு முன்பாக குனிந்து இஸ்திக்ஃபார் செய்யுங்கள். அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவருக்கு உதவியாளராக மாறுங்கள்.

ஆனால், இந்த எதிரிகளின் கண்கள், அறிவு இரண்டிலும் திரை உள்ளது. இஸ்லாத்தின் பெயரால், இறைவனின் பெயரால் இறை அடியார்கள் மீது அநீதியிழைக்கப்படுகிறது. அல்லாஹ்வின் அடியார்கள் மீது அநீதி, வரம்பு மீறல் எல்லை கடக்கும் போது **மதா நஸ்ருல்லாஹ்** – அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்? என்று குரலை உயர்த்துகின்றனர். அப்போது அல்லாஹ் **இன்ன நஸ்ருல்லாஹி கரீப்** – அல்லாஹ்வின் உதவி மிக விரைவில் என்று அல்லாஹ்வும் பதிலளிக்கின்றான் என்பதை இந்த எதிரிகள் மறந்து விடுகின்றனர்.

எனவே அஹ்மதிகளின் மீது இழைக்கப்படுகின்ற அநீதியால் எல்லா இடத்திலும் அல்லாஹ் தனது நெருக்கத்தை அவர்களுக்கு வழங்குகின்றான். நாடு பிரிக்கப்பட்ட போது பல முஸ்லிம் பெயர்தாங்கி ஆலிம்கள் பாகிஸ்தான் வந்து விட்டனர். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக ஏதாவது ஒரு சம்பவம் தினந்தோறும் கேள்விப்படுகிறோம். இவர்கள் நாட்டில் ஒரு குழப்பத்தின் புயலைக் கிளப்பி விடுகின்றனர். அஹ்மதிகளுக்கு எதிராக கிளப்பிவிடப்பட்டுள்ள இந்த அநீதியால் நாட்டிற்கு பெரும் கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது. நாட்டின் மீது அநுதாபம் கொண்டவர்களாகத் தம்மை காட்டிக் கொள்கின்ற இம்மக்களுள் சிலர் அஹ்மதிகளிடம் கூறுகின்றனர். உங்களுக்கு இப்போது இரண்டே Option தான் உள்ளது. ஒன்று, அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள்; அல்லது நாட்டை விட்டு வெளியில் போய் விடுங்கள். இரண்டாவது, உங்கள் உயிரை விடுவதற்கு எப்போதும் தயாராக இருங்கள்.

இஸ்லாத்தின் பெயரால், **ரஹ்மத்துல் லில் ஆலமீன்** – அகில உலகங்களின் அருட்கொடையின் பெயரால் இந்த அநீதிகள் இழைக்கப்படுகின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நபிமார்களுள் உன்னதமானவர்; காத்தமுல் அன்பியா ஆவார்கள். எனவே அன்னாரின் தகுதியைப் பாதுகாப்பதற்காகவே நாங்கள் உங்கள் மீது இந்த அநீதிகளையெல்லாம் இழைக்கின்றோம். மார்க்க ரோஷம் கொண்டு இதனைச் செய்கிறோம் என்கின்றனர். அவர்களின் கூற்றுப்படி இஸ்லாமிய நாடு என்று அழைக்கப்படுகின்ற

பாகிஸ்தானுக்கு மார்க்க ரோஷம் இருப்பது மிக அவசியமாகும். ஆனால், மார்க்க ரோஷம் என்றால் என்ன? அல்லாஹ்வின் பெயரால் அவனது அடியார்களைக் கொலை செய்வதுதானா! முதலில் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ரோஷ உணர்வு காட்டுபவர்கள் உலகில் அஹ்மதிகள்தான். அவர்(அஹ்மதி)களின் அருகில் கூட இவர்களால் செல்ல இயலாது. இஸ்லாத்தின் செய்தியை உலகின் மூலை முடுக்குகளில் சென்று சேர்ப்பதற்கு அஹ்மதிகள் குர்பானி கொடுக்கின்றனர். இதில் இலட்சத்தில், கோடியில் ஒரு பங்கு கூட இவர்கள் செய்வதில்லை.

பல முஸ்லிம் நாடுகள் எண்ணெய் வளத்தை வைத்துக் கொண்டு முல்லாக்களுக்கு உதவி செய்கின்றனர். ஆனால் அவர்களோ அதனை தனது சுயநலத்திற்குப் பயன்படுத்துகின்றனர். தமது சொந்த கருவூலங்களை நிரப்புகின்றனர். அந்த செல்வங்களை வன்முறை மற்றும் அநீதியிழைப்பதற்காக பயன்படுத்துகின்றனர். ஆனால் இஸ்லாத்தினை பரப்புவதற்காக சிறிதும் முயற்சி செய்வதில்லை.

இன்று பாகிஸ்தானில் உள்ள மவ்லவிகள் தான் இஸ்லாத்திற்குப் பெரிய வெற்றி தேடுபவர்களாக காட்டிக் கொள்கின்றனர். பாகிஸ்தானில் காதியானிகள் தமது கொள்கைப்படி வாழ்வதை எங்களால் சகித்துக் கொள்ள முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட போது அதற்காக கடுமையாக முயற்சி செய்தவர்கள் அஹ்மதிகள் என்பதை நேர்மையான உள்ளம் கொண்டவர்கள் ஏற்றுக் கொள்வர். அந்த முயற்சிகள் நடந்து கொண்டிருந்த போது நீங்கள் (பாகிஸ்தான் உலமாக்கள்) என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இன்றைக்கு பாகிஸ்தானின் அனுதாபிகள் மற்றும் அதன் எஜமானர் ஆவதற்கு முயற்சி செய்பவர்கள் அன்று பாகிஸ்தான் உருவாவதையே எதிர்த்து நின்றனர்.

ஜமாஅத் அஹ்மதிய்யா தான் முஸ்லிம்களின் உரிமையைப் பெற்றுத் தருவதற்கு முயற்சி செய்தது. அவர்களின் தரப்பிலேயே சிலரின் மேற்கோள்களை தருகிறேன்.

23 மார்ச் பாகிஸ்தான் தினம் கொண்டாடப்படுகிறது. தற்செயலாக இவ்விஷயங்களை இப்போது கூறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நல்லுள்ளம் கொண்டோராகவும் அதே வேளையில் அக்கால வரலாற்று சம்பவங்கள் பற்றி அறியாதவர்களாகவும் இருப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக கூறுகிறேன். இம்மக்கள் இந்த மவ்லவிமார்களால் பாகிஸ்தான் வரலாற்றைக் கூட அறிய முடியாமல் இருக்கின்றனர். இந்த நாட்டிற்காக அஹ்மதிகள் என்ன செய்துள்ளனர் என்று அவர்கள் அறிய வேண்டும். இந்திய முஸ்லிம்களுக்கும் சரி, பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கும் சரி அஹ்மதிகள் செய்துள்ள பணி என்னவென்று தெரிய வேண்டும். தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு நல்ல மனிதர் மவ்லானா முஹம்மது அலி சாஹிப் தனது ஹம்தர்த் என்ற பத்திரிகையின் 26 செப்டம்பர் 1927 -ல் எழுதுகிறார்.

ஜனாப் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் மற்றும் அவருடைய ஒழுங்கமைப்பான ஜமாஅத் ஆகிய இருவரும் எந்தக் கொள்கை வேறுபாடும் பார்க்காமல் முஸ்லிம்களுக்காக ஜிஹாத் செய்வதாக தம்மை அர்ப்பணித்துக் கொண்டனர் என்பதனைப் பற்றி குறிப்பிடாமல் இருப்பது பெரும் நன்றிகெட்ட செயலாகும். இந்த ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பின் செயல்முறை பொதுமக்களிடம் இஸ்லாத்தைப் பற்றி பொதுவாகவும், அம்மனிதரைப் பற்றி குறிப்பாகவும் ஒரு நல்லபிப்பிராயத்தை (நன்மதிப்பை) ஏற்படுத்தும் நாளாகும். அல்லாஹ்வின் பெயரால் இஸ்லாத்தின் பெருமையை உரக்க முழக்கமிட்டு இஸ்லாத்தின் சேவையை எடுத்து வைத்து சாதாரண விஷயத்தை பெரிதுபடுத்துகின்ற மற்றவருக்கும் வழிகாட்டும் விளக்காக இவர்கள் நிரூபணம் ஆகும் நாளும் வெகு தூரத்தில் இல்லை. அதாவது, வெளிப்படையாக உரத்த குரலில் முழக்கமிட்டு விட்டு செயல்ரீதியாக மிக சாதாரணமாக இருப்பவர்களுக்கு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் மற்றும் அவரது ஜமாஅத் ஒரு வழிகாட்டும் விளக்காகும் என்பது நிரூபணமாகும்.

பிறகு இன்குலாப் என்ற பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் பிரபலமான இஸ்லாமிய லீடர் அப்துல் மஜீத் சாஹிப் எழுதுகிறார்.

மிர்ஸா மஹ்மூத் அஹ்மத் அவர்கள் இக்காலத்தில் இஸ்லாத்திற்கு பெரும் சேவை செய்துள்ளார். பெரிய பெரிய இஸ்லாமியப் பணிகளை மிர்ஸா சாஹிப் (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்) செய்துள்ளார்.

பாகிஸ்தான் உருவாக்குவதற்கு காயிதே அஃஸம் பெரும் முயற்சி செய்தது எல்லாருக்கும் தெரியும். அவருக்கு ஒரு நேரம் வந்தது. அப்போது காயிதே அஃஸம் ஜின்னா சாஹிப் அவர்கள் தமது பணியில் விரக்தியுற்று இந்தியாவை விட்டு இங்கிலாந்து வந்து விட்டார்.

அது குறித்து ஜின்னா சாஹிப் எழுதுகிறார்.

நான் இந்தியாவுக்கு எந்த உதவியும் செய்ய முடியாதோ? என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டபோது, என்னால் இந்துக்களின் மனப்பான்மையையும் மாற்ற முடியவில்லை. முஸ்லிம்களின் கண்களைத் திறக்கவும் முடியவில்லை. பிறகு நான் இலண்டனுக்குச் சென்று குடியேற முடிவு செய்தேன்.

இந்த நிலையில் இந்திய முஸ்லிம்களுக்கு பெரும் சங்கடம் ஏற்பட்டது. இதில் ஜமாஅத் அஹ்மதிய்யாவிற்கு மிகவும் அனுதாபம் ஏற்பட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மிகவும் வருத்தமடைந்தார்கள். அப்போது இலண்டனின் இமாம் ஆக இருந்த அப்துர் ரஹீம் சாஹிப் மூலம் காயிதே அஃஸமுக்கு சில விஷயங்களைப் புரிய வைத்தார்கள்.

நீங்கள் உடனே இந்தியாவிற்கு திரும்பி விட வேண்டும் என்று ஜின்னா சாஹிபுக்கு அப்துர் ரஹீம் சாஹிப் புரிய வைத்தார்கள். இதனைப் பற்றி ஜின்னா சாஹிப் பின்னர் குறிப்பிடும் போது கூறினார். இமாம் சாஹிப் எனக்கு மிகவும் தைரியம் ஊட்டி எனக்கு தன்னம்பிக்கை ஊட்டும் (எந்த)ஒரு வழியையும் (விட்டு)விடவில்லை.

இன்னொருவர் ஷாஃபி மவ்லவி மூஈனுத்தீன் சாஹிப். இவரும் அஹ்மதி அல்லாதவர். இவர் எழுதுகிறார்:

மிஸ்டர் லியாகத் அலி கான், இலண்டன் இமாம் மவ்லானா அப்துர் ரஹீம் சாஹிப் இருவரும் முஹம்மது அலி ஜின்னாவிடம் தனது கருத்தை மாற்றுமாறு வலியுறுத்தினார்கள். நாட்டுக்குத் திரும்பி அரசியல் மற்றும் சமுதாயம் இரண்டிற்கும் உமது சேவையைத் தர வேண்டும் என்று தூண்டினர். இதன் விளைவாக மிஸ்டர் ஜின்னா 1936-ல் இந்தியா திரும்பினார். தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜஸ்டில் முனீர். 1953 -ல் எழுதுகிறார்:

அஹ்மதிகளின் மீது ஆதாரமற்ற அபாண்டமான பழி சுமத்தப்படுகிறது. குர்தாஸ்பூர் இந்தியாவில் சேர்க்கப்படக் காரணம் அஹ்மதிகள் தனித்து செயல்பட்டு வந்தனர். காயிதே அஃஸம் ஜின்னா சாஹிப் அவர்கள், சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களை முஸ்லிம் லீக் சார்பாக வழக்கு தொடுப்பதற்காக நியமித்தார்கள். அவர்கள் ஒரு தனித்துவம் வாய்ந்த ஆதாரத்தை எடுத்து வைத்தார்கள். ஆனால் அந்த நீதிமன்றத்தின் தலைவர் அந்த Commission -ன் உறுப்பினராக இருந்தார். குர்தாஸ்பூர் பிரச்சனையில் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் செயல்பாடுகளை தைரியமிக்க, வீரமிக்க நடத்தைகளை வெளிப்படுத்துவதை அந்த நீதிபதி தமது கடமை என்று கருதினார். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் முஸ்லிம்களுக்கு அளவற்ற, சுயநலமற்ற தொண்டு ஆற்றியுள்ளார். அவ்வாறிருந்தும் நீதிமன்றங்களில் அன்னாரின் பணிகளைப் பற்றி இவர்களின் வரலாறுகள் எந்த அளவுக்கு குறைவாக சுட்டிக்காட்டியுள்ளவென்றால் அது அவர்களின் நன்றிகேட்டிற்கான ஒரு வெட்கத்தக்க ஆதாரமாகும். ஹஸ்ரத் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் நீதிமன்றங்களில் எடுத்து வைத்த வாதங்களைக் கண்டு அஹ்மதியல்லாதவர்கள் அதனை மறைக்க முயற்சி செய்வது வெட்கங்கெட்ட செயல் என்று கூறுகின்றனர்!

தனி நாடு உருவாக்கப்பட்டு அதற்கு பாகிஸ்தான் என்று பெயர் வைக்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலின்படி ஜமாஅத் அன்பர்கள் செய்த முயற்சிகளை நான் உங்கள் முன்பு இப்போது கூறினேன்.

கிலாஃபத் அஹ்மதிய்யாதான் ஜமாஅத் அன்பர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கும், ஒழுக்க முன்னேற்றத்திற்கும் பாடுபடுவதுடன் முஸ்லிம் சமுதாயத்திற்கும் தேவை ஏற்படும்போதெல்லாம் தொண்டு செய்து வந்துள்ளது என்பதற்கு வரலாறு எப்போதும் சான்று பகரும்.

அது காஷ்மீர் விடுதலை பிரச்சனையாகட்டும்! அல்லது பாலஸ்தீனியர்களின் விடுதலை பிரச்சனையாகட்டும்! பாகிஸ்தான் – இந்தியா நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்களின் உரிமை பிரச்சனையாகட்டும்! ஜமாஅத் அஹ்மதிய்யாவே குரல் கொடுத்துள்ளது என்பது ஜமாஅத்தின் வரலாறு சாட்சியாகும்.

எப்போதும் முஸ்லிம்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதில் ஜமாஅத் முன்னணியில் நின்றுள்ளது. அதற்கு எதிரில் மவ்லவி என்ன பணி செய்துள்ளார் என்று பாருங்கள்.

பாகிஸ்தான் எங்களது உழைப்பால் கிடைத்தது என்கிறது. அவர்களின் உலமாக்களின் விளக்கங்களை சற்று படியுங்கள். இதுவும் நீதிமன்ற அறிக்கை ஆகும்.

அதாவுல்லாஹ் சாஹிப் – புகாரி அஹ்ராரி தலைவர் எழுதுகிறார்:

பாகிஸ்தான் என்ற குழந்தையை உருவாக்கும் எந்த ஒரு ஆண் மகனையும் இதுவரை எந்தத் தாயும் பெறவில்லை. பிறகு அதே அறிக்கையில் வருகிறது.

பாகிஸ்தான் என்பவள் ஒரு தீய நடத்தை கொண்ட பெண் ஆவாள். அவளை அஹ்ராரிகளின் நிர்பந்தத்திற்காக ஏற்றுக் கொண்டுள்ளோம்! இன்னாலில்லாஹ்.

பிறகு அவரே மீண்டும் எழுதுகிறார். அவரே தரும் விளக்கம் இதுதான்.

எவர்கள் முஸ்லிம் லீக்கிற்கு வாக்களிப்பார்களோ அவர்கள் பன்றிகளும், பன்றியை வளர்ப்பவர்களும் ஆவர்.

பிறகு நீதிமன்ற ஆய்வு அறிக்கை கூறுகிறது. மஜ்லிஸ் அஹ்ராரிகளின் செயற்குழுக் கூட்டம் 3 மார்ச், 1940 டெல்லியில் கூடியது. அதில் பாகிஸ்தானை தனி நாடாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு தமது அதிருப்தியை தெரிவிக்கப்பட்டது. பிறகு அதன் லீடர்கள் பாகிஸ்தான் குறித்து தமது சொற்பொழிவுகளில் கலிஜஸ்தான் (குப்பை நாடு) என்று கூறினர். பிறகு இன்னொரு நீதிமன்ற ஆய்வறிக்கையில் எழுதப்பட்டுள்ளது.

ஜமாஅத்தே இஸ்லாமி முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தானின் தனி நாடு கோரிக்கையை எதிர்க்கிறது. பாகிஸ்தான் உருவானது முதல் அதனை நா பாகிஸ்தான் (தூய்மையில்லாத நாடு) என்று குறிப்பிட்டு வந்தது. இந்த ஜமாஅத்தே இஸ்லாமி, பாகிஸ்தானையும் அதன் அரசை நடத்துபவர்களையும் எதிர்த்து வந்தது. நமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள அவர்களது இந்த எழுத்துக்களில் எதுவுமே பாகிஸ்தான் உருவாவதற்கு ஆதரவாக இருக்கவில்லை என்பது மட்டுமின்றி ஆதரவு சைகை கூட அவற்றில் இருந்ததில்லை. மாறாக பாகிஸ்தான் உருவாவதற்கு எதிர்ப்பே அவற்றில் இருந்தது. அவர்களது கருத்துக்கள் இப்போதும் உள்ளன.

மவ்லானா மவ்தூதி சாஹிப் கூறுகின்றார்: முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியானது, இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியை விட்டு தனித்து சுதந்திரமாகி விட வேண்டும் என்று இவர்கள் கருதுகின்றனர். அங்கு தனித்த ஒரு ஜனநாயக நாடு உருவாக வேண்டும். அதன் மூலம் அங்கு ஒரு இறையாட்சி உருவாகி விடும் என்று கருதுகின்றனர். அவர்களின் எண்ணம் தவறாகும். இவர்களின் முயற்சிகளால் கிடைக்கப்போவது உண்மையில் முஸ்லிம்களின் காஃபிர் தனமான ஓர் ஆட்சி தான். அவ்வாறு உருவாகின்ற ஆட்சிக்கு இஸ்லாமிய ஆட்சி என்று பெயர் வைப்பது அந்த தூய பெயரை இழிவுபடுத்துவதாகும்.

இப்போது எந்த அளவுக்கு காஃபிர் தனமான ஆட்சியாக இதனை மாற்ற முயற்சி நடக்கிறது என்பதற்கு ஆதாரம் ஒவ்வொருவரின் முன் உள்ளது.

இந்த விளக்கம் பாகிஸ்தான் உருவாவதில் இவர்களின் எண்ணம் எப்படி இருந்தது என்று தெரிய வருகிறது. எந்த ஆட்சி பாகிஸ்தானில் அமைந்தாலும் அது முல்லாக்களை ஆற்றல் வாய்ந்தவர்களை திருப்திப்படுத்த முனைகிறது. முல்லாக்களின் நிகழ்ச்சி நிரலில் உள்ள விஷயம் அஹ்மதிகளுக்கு எதிராக என்ன செய்ய முடியுமோ அதனை செய்யுங்கள் என்பதாகும்.

1953 ஆம் ஆண்டு நடந்த குழப்பங்களில் கொஞ்சமாவது நீதியை நேசிக்கின்ற மக்கள் இருந்தனர். எனவே மவ்லவிகளால் தாம் நினைத்த அளவுக்கு செய்ய முடிந்ததில்லை. ஆனால் 1974 –ல் இருந்த ஆட்சி இஸ்லாத்தின் பெயரால் மவ்லவிமார்களுடன் சேர்ந்து கொண்டு அஹ்மதிகளின் மீது அநீதியைக் கட்டவிழ்த்து விட்டது. அவை அனைத்தும் ஜனநாயக செயல்களாக காட்டப்பட்டன. வருங்காலத்தில் வரக்கூடிய நேர்மையான வரலாற்று ஆசிரியர்கள் பாகிஸ்தான் வரலாற்றை எழுதும் போது இந்த சம்பவங்கள் கருப்பு அத்தியாயங்களாக எழுதப்படும். பிறகு 1984 ஆம் ஆண்டு ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது. அஹ்மதிகளின் மீது கொடுமையிழைக்கும் சட்டத்தை Assembly இயற்றியது. அதன் மூலமாக அஹ்மதிய்யத்தை அழித்து விட வேண்டும் என்று நினைத்தது. மிகவும் ஆரவாரமாக அறிவிப்பு செய்யப்பட்டது. நான் அஹ்மதிய்யத் என்ற கேன்சரை அழித்து விடுவேன் என்று அந்த அதிபர் கூறினார். என்ன ஆயிற்று? அஹ்மதிய்யத்திற்கு வளர்ச்சிக்கு மேல் வளர்ச்சி ஏற்பட்டது. அவர்களோ இன்றுவரை அல்லாஹ்வின் செக்கில் இட்டு ஆட்டப்படுகின்றனர். அஹ்மதிகளின் மீது இழைக்கப்படும் எல்லா கொடுமைகளுக்குப் பிறகும் கூட கிலாஃபத்தே அஹ்மதிய்யாவின் பரக்கத்தால் – ஒரு கையில் ஒன்றுதிரண்டதன் பரக்கத்தால் அல்லாஹ் அருள்புரிந்தவாறு ஜமாஅத்தை இந்த சோதனைகளிலிருந்து வெளியில் கொண்டு வந்தான். ஜமாஅத் அந்நிலையிலும் பொறுமையின் முன்மாதிரியைக் காட்டியது. இன்றுவரை காட்டி வருகிறது. இது கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டிருப்பதன் காரணத்தினால் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தவர்கள் தமது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர் என்பதற்கு இது ஆதாரமாகும். இக்காலத்தில் பாகிஸ்தான் அரசு நினைவில் கொள்ள வேண்டும். பாகிஸ்தானின் ஸ்திரத்தன்மைக்கு ஒவ்வொரு அஹ்மதி குடிமகனும் துஆ செய்து வருகின்றார். மேலும் காயிதே அஃஸம் சாஹிப் உருவாக்க விரும்பிய பாகிஸ்தானை உருவாக்குங்கள். மாறாக மார்க்க, மத துவேஷங்களை உருவாக்காதீர்கள். மார்க்கத்தின் அடிப்படையின் மீது மற்றவரின் இரத்தத்தை சிந்தாதீர்கள். காயிதே அஃஸம் என்ன கூறுகின்றார்கள்?

1947 ஆம் ஆண்டில் அகில பாகிஸ்தான் நாடாளுமன்ற தலைமையக உரையில் காயிதே அஃஸம் ஜின்னா சாஹிப் கூறுகின்றார்:

பாகிஸ்தான் அரசை மிகவும் நல்ல நேர்த்தியான அரசாக மாற்ற வேண்டும் என்றால் மக்களின் நலனில் நாம் மிக அக்கறை காட்ட வேண்டும். குறிப்பாக எளிய சாதாரண மக்களை கவனிக்க வேண்டும். நீங்கள் ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டால் சிறிது காலத்திற்குள்ளாகவே இந்நாட்டில் தமது மாநில நலன், வட்டார சிந்தனை, இனவெறிகளால் மக்கள் பிரிக்கப்படுவர். நமது நாடு எந்த பாரபட்சமற்ற நாடாக உருவாக்கப்படுகிறது. இங்கு ஒரு பிரிவுக்கு இன்னொரு பிரிவின் மீது எந்த சிறப்பும் கிடையாது. அல்லது குலம், இனம், கொள்கை வித்தியாசங்கள் இங்கு ஏற்கப்படாது. நாம் ஒரு நாட்டின் குடிமக்கள் ஆவோம். சம உரிமையுள்ள குடிமக்கள் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்நாடு உருவாகிறது. நீங்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள். உங்கள் கோயில்களில் சென்று பூஜை செய்ய உங்களுக்கு சுதந்திரமுண்டு. உங்கள் பள்ளிவாசல்களுக்கு செல்லலாம். அதற்கும் உங்களுக்கு சுதந்திரம் உண்டு. பாகிஸ்தானின் எல்லைக்குள் நீங்கள் எந்த வழிபாட்டுத் தலத்திற்கும் சுதந்திரமாக செல்லலாம். நீங்கள் எந்த மதம், கொள்கை உடையவராகவும் இருக்கலாம். எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். அதற்கும் அரசாங்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்தக் கொள்கையை நீங்கள் உங்கள் கண்ணின் மணிகளாக ஏற்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். காயிதே அஃஸம் கூறுகின்றார்கள். இந்த விஷயத்தை நீங்கள் உங்கள் கண்ணின் மணியாக ஏற்று நடக்க வேண்டும். பிறகு நாளாக நாளாக ஒரு காட்சியைப் பார்ப்பீர்கள். இந்து, இந்துவாக இருக்கமாட்டார். முஸ்லிம், முஸ்லிமாக இருக்கமாட்டார். மதச் சண்டை கிடையாது. அது ஒவ்வொருவரின் தனிப்பட்ட கொள்கையாக மட்டும் இருக்கும். மாறாக பாகிஸ்தானின் ஒரு குடிமகன் என்ற முறையில் அரசியல் கருத்து மட்டும் இங்கு நிலைத்திருக்கும்.

இந்த ஒரு எதிர்பார்ப்பைத்தான் காயிதே அஃஸம் எடுத்து வைத்தார்கள். இப்போது அசெம்ப்ளி முற்றிலும் அதற்கு மாற்றமாக பணி செய்து கொண்டிருக்கிறது. இதுவே பாகிஸ்தான் நிறுவுனர் இந்த ஆட்சியை நடத்துவதில் கொண்டிருந்த நிலைபாடு ஆகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஒருவரின் கொள்கை, மார்க்க விஷயங்களில் தீர்ப்பு கொண்டிருப்பது அசெம்ப்ளியின் வேலையல்ல. யார் யார் எப்படி தமது இபாதத்தை செய்ய வேண்டும் என்று அசெம்ப்ளி கூற வேண்டிய தேவையில்லை.

பாகிஸ்தான் அரசு என்றைக்கு அரசாங்கம் நடத்த வேண்டிய அசல் நிலையைப் புரிந்து கொண்டு வேலையைத் தொடங்குமோ – காயிதே அஃஸம் வழிகாட்டியபடி நடக்குமோ அந்த நாளில் பாகிஸ்தானின் வளர்ச்சிக்கான புதிய வழி உறுதியாக்கப்படும். இன வாதம், இன வெறி ஒழியும். அப்போதுதான் காயிதே அஃஸம் விரும்பிய நேரிய பாகிஸ்தானை பார்க்க முடியும்.

எனவே உங்களது வரலாற்றிலிருந்து அரசியல் வாதிகளாகிய நீங்கள் பாடம் கற்க வேண்டும். எவரது மார்க்க உணர்வு மற்றும் மார்க்கம் பற்றி முடிவெடுப்பது. தமது கொள்கையை திணிப்பது போன்ற காரியங்களுக்கு இஸ்லாமும் அனுமதியளிக்கவில்லை. அந்த உன்னத மனிதர் பாகிஸ்தானை உருவாக்கியவர் இதற்கு அனுமதி அளிக்கவுமில்லை.

ஒரு குடிமகன் என்ற முறையில் பாகிஸ்தானின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அவரது உரிமையை வழங்க வேண்டும். வாக்களிக்கும் உரிமை, பணி செய்யும் உரிமை, மார்க்க உரிமை, கொள்கை உரிமை அனைத்தும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைக்க வேண்டும். சட்டம் எல்லாருக்கும் ஒன்றுதான். இந்த சமத்துவ நிலை அனைவருக்கும் கிடைக்கும்போது நாட்டின் அமைதி ஏற்படும். அரசாங்கம் பாடம் கற்க வேண்டும்.

1974 -ல் தீர்ப்பு செய்யப்பட்டு 1984-ல் அது மேலும் விரிவுபடுத்தப்பட்டு அஹ்மதிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலிருந்து இன்று வரை நாடு வீழ்ச்சியை நோக்கி செல்கிறதேயொழிய வளர்ச்சி எதுவும் தென்படவில்லை. ஓர் அடி ஏறினால் மூன்றடி சறுக்கி விடுகிறது. அஹ்மதிகள் இந்த அநீதிகளுக்குப் பிறகும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவே உழைக்க வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். செய்து கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் அஹ்மதிகளுக்கு நஷ்டம் விளைவிக்க முயல்வோர் நினைவில் கொள்ளட்டும். இறைவனின் சட்டம் உங்களிடம் நிச்சயம் பழிவாங்கும். கடந்த நாட்களில் ஓர் அஹ்மதி இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளார். அந்த இரத்தம் ஒருபோதும் வீணாகாது. அல்லாஹ்வின் கூற்றை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

மேலும் எவரேனும் நம்பிக்கை கொண்ட ஒருவனை வேண்டுமென்றே கொலை செய்துவிட்டால், அவனுக்குரிய தண்டனை நரகமேயாகும். அவன் அதில் நெடுங்காலம் தங்கிவிடுவான். அல்லாஹ் அவனிடத்துக் கோபங் கெண்டு அவனைச் சபித்துவிடுவான். மேலும் அவனுக்கு மாபெரும் ஆக்கினையையும் ஏற்பாடு செய்துள்ளான் (4:94)

எனவே அல்லாஹ்வின் தண்டனைக்கு அஞ்சுங்கள். ஈமான் பற்றி ஒரு ஹதீஸில் வருகிறது

ஈமானின் பெரும் பகுதி லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதாகும். முழு கலிமா கூட இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஈமான் என்பது லாயிலாஹ் இல்லல்லாஹ் என்று கூறுவதாகும்.

பிறகு ஒரு சம்பவம் சஹாபி அறிவிக்கின்றார்:

யுத்தத்தில் ஒரு சஹாபி எதிரியைப் பிடித்தார். வெட்டும் போது அவர் கலிமா சொன்னார். பிறகும் அவரை அந்த சஹாபி கொன்று விட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இந்த விஷயம் வந்தடைந்ததும் அன்னார் கடுமையாக அந்த சஹாபியைப் பார்த்து கேட்டார்கள். அவர் உயிருக்குப் பயந்து கலிமா கூறினாரா? அல்லது மனப்பூர்வமாக கலிமா சொன்னாரா என்று அவரது உள்ளத்தைப் பிளந்து பார்த்தீரா?

அந்த சஹாபி கூறுகிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மீது கோபம் கொண்டு விட்டார்களே? அதுவரை நான் முஸ்லிம் ஆகாமல் இருந்திருக்கக் கூடாதா என்று எனக்கு ஆதங்கம் ஏற்பட்டது.

இவ்வாறெல்லாம் இருந்தும் கூட கலிமா சொன்னவர்களை ஷஹீதாக்கிக் கொண்டே செல்கின்றனர். கடந்த நாட்களில் மிகவும் அநீதியான முறையில் ஒரு இளைஞர் மற்றும் அவரது மனைவி இருவரையும் முல்தான் பகுதியில் ஷஹீதாக்கப்பட்டுள்ளனர். இக்காலத்தின் இமாமை ஏற்றதுதான் அவர்கள் செய்த தவறு!

இருவரும் மருத்துவர்கள். நல்ல திறமைமிக்க மருத்துவராக இருந்தனர். டாக்டர் சிராஸ் வயது 37. டாக்டர் நூரின் சிராஸ் வயது 28. எனது கருத்தின்படி பெண்களில் இவர் முதல் ஷஹீத் ஆவார்கள்.

இவர்களுக்கு கொஞ்சமும் மனிதநேயமில்லை. மனிதர்களுக்கு பயன் அளிக்கக்கூடியவர்கள், மருத்துவ சேவை செய்பவர்கள், கித்மத்தே கல்க் – படைப்பின சேவ செய்பவர்கள் உங்கள் நோயாளிகளுக்குதான் சேவை செய்கின்றனர். இந்த எதிரிகள் அவர்களை மிகவும் விசுவாசமற்ற முறையில் ஷஹீதாக்கியிருக்கிறார்கள்.

அஹ்மதிகள் ஒரு இலட்சியத்திற்காக ஷஹீதாகின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் வந்ததன் மூலம் வெளிப்பட்ட பேருண்மையை மறுத்தன் காரணமாக எவ்வளவு தீய விளைவு ஏற்படுகிறது எனில் பல அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். இதுவும் இறை வல்லமையின் பழிவாங்கல் ஆகும். இது வாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம்தான் முஸ்லிம்கள் இல்லையே! முஸ்லிம்கள், முஸ்லிம்களைக் கொலை செய்கின்றனர். அதன் விளைவு பற்றி நான் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தில் வருகிறது. இவர்களுடன் பிறகு என்ன நடக்கும் என்று அல்லாஹ்வே நன்கறிவான். இவர்களுக்கு சிறிதும் அல்லாஹ்வின் மீது அச்சம் இல்லை.

அல்லாஹ் இவர்கள் மீது கருணை காட்டட்டும். கடந்த சில நாட்களுக்கு முன் அரசுடனும் இராணுவத்துடனும் சண்டை. அதற்கு பிறகு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அதற்கு ஒரு நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்போது முல்லாக்கள் கூறியுள்ளனர். இந்த ஆட்சியை நிலைநாட்டி விடலாம் என்று கருதாதீர்கள். இப்போது ஆரம்பித்த பிரச்சனை இன்றோடு முடியப் போவதில்லை. முழு நாட்டையும் இக்கலவரம் தமது பிடியில் கொண்டு வந்து விடும். பாகிஸ்தானின் இன்றைய நிலை முழு நாட்டையும் ஒரு தீவிரவாத நாடாக வன்முறைக்களமாக உலகின் முன் காட்டி வருகிறது.

இங்குள்ள (இங்கிலாந்து) வெளிவுறவு அமைச்சர் கூறுகின்றார்:

பாகிஸ்தான் இப்பிரச்சனையை தீர்க்காவிட்டால் முழு பாகிஸ்தானும் தீவீரவாத நாடாகக் கருதப்படும்.

பாகிஸ்தானை கலிஜஸ்தான் (அழுக்கு நாடு) என்று கூறிய முல்லாக்கள் இப்போது அதனை செயல்ரீதியாக உண்மையாக்கிக் காட்ட முயன்று வருகின்றனர். வெளிப்படையாக இவர்கள் கையில் இருப்பவர்கள் மீது அல்லாஹ்தான் அருள்புரிய வேண்டும். பாகிஸ்தான் என்ற பெயரும் கூட மிஞ்ச விடுவார்களா? மாட்டார்களா? என்று தெரியவில்லை.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாக்கள் இந்த நாட்டை சீர்படுத்த மக்களுக்கு தொடர்ந்து கவனமூட்டி வந்துள்ளனர். இந்த முல்லாக்களிடம் இருந்து எச்சரிக்கையாக இருங்கள். ஒருமுறை நீங்கள் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து விட்டால் பிறகு நாட்டை அழித்து விடுவார்கள். ஆனால் மக்களுக்கு புரியவில்லை. ஒருபுறம் அரசியல்வாதிகள் தம்மை நாட்டின் அனுதாபிகள் என்று கூறுகின்றனர். மறுபுறம் இந்த அஞ்சத்தக்க உண்மையை விளங்கவில்லை. முல்லாக்கள் பாகிஸ்தானை அழிவின் பக்கம் கொண்டு செல்கின்றனர். எனவே எந்தவொரு கூட்டு முயற்சியும் நஷ்டத்தையே ஏற்படுத்தும். மக்களுக்கும் சரி, நாட்டுக்கும் சரி. நாம் துஆ செய்யலாம். அல்லாஹ் இந்த நாட்டை காப்பாற்றுவானாக. முல்லாக்கள் அஹ்மதிகளை ஷஹீதாக்குவதன் மூலம் என்ன செய்ய விரும்புகின்றார்களோ அது அஹ்மதிய்யத்தின் வளர்ச்சியைத் தடை செய்து விடலாம் என்பதாகும். பழிவாங்கும் எண்ணமாகும். ஆனால் அஹ்மதிய்யத் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. எந்த கப்பலை அல்லாஹ் உருவாக்கியுள்ளானோ அதனை அவனே பாதுகாக்கவும் செய்வான். அந்தக் கப்பலின் பயணம் இன்ஷா அல்லாஹ் தொடரும். ஆம்! ஆங்காங்கே அஹ்மதிகளை ஷஹீதாக்குகின்றனர். நான் ஏற்கனவே கூறியது போன்று அந்த சோதனை வந்து கொண்டுதான் இருக்கும். சஹாதத் அடைந்தவர்கள் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப நிரந்தர வாழ்வைப் பெறுகின்றனர். அல்லாஹ்வின் அன்பைப் பெறுகின்றனர். எவ்வாறிருப்பினும் அஹ்மதிகள் குறிப்பாக பாகிஸ்தானுக்காக துஆவில் அதிக அழுத்தம் கொடுங்கள்.

பாகிஸ்தான் ஒரு நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் உள்ளது. அஹ்மதிகள் துஆ செய்வதன் மூலமே வீழ்ச்சி அடைவதிலிருந்து தப்ப முடியும்.

இந்த நாட்டை உருவாக்கியதிலும் ஜமாஅத் பெரும் பங்கு வகித்தது. அதனைக் காப்பதிலும் அஹ்மதிகளின் துஆதான் இன்ஷா அல்லாஹ் உதவி செய்யப் போகிறது. அல்லாஹ் அதற்கு வாய்ப்பளிப்பானாக.

டாக்டர் ஒருவரின் ஷஹீது பற்றி கூறினேன். மேலும் அவர் பற்றி சில விஷயங்கள் கூறுவேன். 14 மார்ச் 2009 அன்று டியூட்டி முடிந்து அவரும் அவரது மனைவியும் 3.15 மணிக்கு வீடு திரும்பினார். சிலர் மறைந்திருந்து தாக்கினர். இருவரும் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர்கள். டாக்டர் சிராஸ் உடைய படுக்கை அறையில் கையைப் பின்னால் கட்டப்பட்டு கண்கள் கட்டப்பட்டு வாயில் பஞ்சு அடைக்கப்பட்டு கழுத்தை கயிற்றால் இறுக்கி கொன்றுள்ளனர்.

அவர்களின் பணிப்பெண் மாலையில் வந்த போது மூன்று பேரின் உடலும் கிடத்தப்பட்டிருந்தது. மனைவி டிராயிங் ரூமில் கிடத்தப்பட்டிருந்தார். முகத்தில் துணி போடப்பட்டிருந்தது.

டாக்டர் சிராஸ் சாஹிப் முல்தானில் கண் மருத்துவராவார். டாக்டர் நூரினும், கணவர் இருவரும் நல்ல இனிய உள்ளம் கொண்டவர்கள். அவர்களை அஹ்மதியல்லாதவர்கள் கூட அவர்களின் இனிய சுபாவத்தால் நன்கு அறிந்திருந்தனர். அவர் வாழ்ந்த காலணி நாற்புறம் சுவர்களால் சூழப்பட்டது. சுவர்களின் மேல் கூறிய பிளேடுகளும் நடப்பட்டு இருந்தன. ஒரு கேட்டும் உண்டு. இவ்வளவும் மீறி உள்ளே செல்கின்றார் எனில் ஒரு சதித்திட்டம் போடப்பட்டுள்ளது. ஏனெனில் எந்த செக்கிங்கும் இல்லாமல் எவரும் அக்காலணிக்குள் நுழைய முடியாது. எனவே, சூழ்ச்சிக்காரர் ஒருவர் அதில் இருந்திருக்கின்றார் என்று தெரிகிறது. மிகவும் தகுதி வாய்ந்த மனிதர். 1998 ல் ஒரு சிறந்த கட்டுரை எழுதியதற்காக கௌரவிக்கப்பட்டார். குழந்தைகள் இல்லை. சிறிது காலத்திற்கு முன்புதான் திருமணம் நடந்தது. இவர்களின் காயிப் ஜனாஸாவை ஜுமுஆ தொழுகைக்குப் பிறக நடத்துவேன். இன்னும் வேறு சில ஜனாஸாக்களும் உள்ளனர்.

டாக்டர் அஸ்லம். ஹரிவூரா மாவட்டத்தின் அமீர். 15 மார்ச்சில் வஃபாத் ஆனார்கள். சிராலியோனில் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் சில காலம் பணி செய்தார். நீண்ட காலம் அமீராக இருந்தார். இவரையும் சில நாட்கள் முன் கொலை செய்ய முயற்சி நடந்தது. காதியானி என்பதால் உம்மை கொல்ல வந்திருக்கிறோம் என்று கூறியதும் மக்கள் ஒன்று கூடியதும் கொலையாளிகள் ஓடி விட்டனர். இவரும் காயமுற்றார். 76 வயது. இந்த காயத்தின் காரணத்தால் பலவீனம் அதிகமாகிக் கொண்டே சென்றிருக்கும் போல் தெரிகிறது. பிறகு நோயாளியாகவும் இருந்தார். இதய நோய் ஏற்பட்டு மரணம் நிகழ்ந்தது. வஸிய்யத் செய்தவர். பெஹஸ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

மூன்றாவது ஜனாஸா நாஸிரா பேகம் சாஹிபா. மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிபின் மனைவி. செய்யது அஸீஸுல்லாஹ் சாஹிபின் மகள். செய்ய அமிரப்பா சாஹிபின் சகோதரி. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மாமா மகள். தூய பெண். அவர்களது ஜனாஸாவும் இத்துடன் தொழப்படும். இந்த எல்லா மர்ஹூமின்களின் தகுதியையும் அல்லாஹ் உயர்த்துவானாக. தனது நெருக்கத்தை வழங்குவானாக. இவர்களின் நன்மைகளை இவர்கள் வாரிசுகள் தொடர் அல்லாஹ் ஏற்பாடு செய்வானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 20.03.2009**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**